# பன்முனை கலாச்சாரத்தின் செயல்பாடு

## பல்வேறு கலாச்சாரங்களுக்கிடையே கேளிக்கை

பன்முனை கலாச்சார செயல்பாட்டுத் திட்டம் ஒரு சமூகத் தொண்டு செயல் திட்டம். இதன் முக்கிய நோக்கமே ஹாங் காங் மக்களிடையே பல்வேறு கலாச்சாரங்களைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவது தான். எங்கள் வலைத்தளத்தில் இந்த திட்டத்தைப் பற்றி நீங்கள் மேலும் தெரிந்து கொள்ளலாம்.

http://arts.cuhk.edu.hk/~ant/knowledge-transfer/multiculturalism-in-action/index.html

## ஹாங் காங்கில் தென் ஆசியர்கள்

தென் ஆசியா என்பது பல நாடுகளைக் கொண்ட புவியியல் கருத்துப்படிவம். இந்தப் பகுதியில் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் , பூட்டான், மாலத்தீவு, நேபால், பாக்கிஸ்தான், இலங்கை மற்றும் இந்தியாவும் அடக்கம்.

| இனம் | மக்கள் தொகை | % |
|---|---|---|
| இந்தியர் | 28,616 | 0.4% |
| பாகிஸ்தானியர் | 18,042 | 0.3% |
| நேபாலி | 16,518 | 0.2% |
| மற்ற ஆசிய நாட்டு மக்கள் (பங்களாதேஷ் மற்றும் இலங்கைப் பகுதியினர்) | 7038 | 0.09% |
| 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு | | |

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி, ஹாங் காங் பகுதியில் 1% மக்கள் தெற்கு ஆசியாவைச் சார்ந்தவர்கள்

## வரலாறு

தென் ஆசியர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஹாங் காங் பகுதியில் குடியேறினர். அவ்வாறு முதலில் குடியேறிய இந்தியர்களில் சிலர் காவல் அலுவலர்களாகவும், சிலர் சிப்பாய்களாகவும்,  சிலர் துணி மற்றும் ஆபரண வணிகர்களாகவும் பணியாற்றினார். பாக்கிஸ்தான் 1947 ஆம் ஆண்டிலும், பங்களாதேஷ் 1971 ஆம் ஆண்டிலும் விடுதலை பெற்றவுடன், அந்த நாட்டு மக்களும் ஹாங் காங் நாட்டில் குடிபுகுந்தனர்.



Copyright © Multiculturalism in Action Project 2016 Language: Tamil

ஹாங் காங் தேசத்தில் நேபாலியரின் வரலாறு 1948 ஆம் ஆண்டு இங்கு ஆங்கிலேயப்படையால் கூர்க்கா படைப்பிரிவு நிறுவப்பட்டதிலிருந்து துவங்கியது. அவர்கள் எல்லை பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு, கடல் பாதுகாப்பு மற்றும் வெடிமருந்து அகற்றல் பொறுப்புகளில் ஈடுபட்டிருந்தனர். இந்த நேபாலியர் சில தொண்டு நிறுவன வேலைகளையும் ஏற்று செய்கிறார்கள்.



ஹாங் காங் நினைவு தினத்தன்று முன்னாள் கூர்க்காக்கள்



இலங்கை உணவு வகைகள்

சமீப காலத்தில் ஹாங் காங் பகுதியில் உள்ள தென் ஆசியர்கள் பலவிதமான தொழில்களை செய்கிறார்கள். கணக்காளர், விளையாட்டு வீரர், தொழிலதிபர், வீட்டு வேலை செய்பவர், ஆசிரியர், கட்டுமானத் தொழிலாளி, வழக்கறிஞர் மற்றும் வங்கியராகப் பணியாற்றுகிறார்கள். தென் ஆசிய உணவு வகைகள், பண்டிகைகள் மற்றும் ஆரோக்கிய வாழ்க்கை முறைகள் ஹாங் காங் பகுதியில் மிகவும் பிரபலமாகிவிட்டன. ஆகையினால் ஹாங் காங் துடிப்புடன் திகழ்கிறது.

## ஒருங்கிணைப்பு

ஹாங் காங் பகுதியில் உள்ள தென் ஆசியர்கள் இந்த நாட்டைத் தமதாகவே கருதி, ஹாங் காங் கலாச்சரத்தையும் பின்பற்றுகிறார்கள். தென் ஆசியர்களுடைய மளிகை சாமான்களும் உணவகங்களும், சிம் சா சோய், ஜோர்டன், யூன் லோங் மற்றும் யோ மா டெயில் பிரபலம். பல தென் ஆசிய உணவகங்களுக்கு சீனத்தில் பெயரும் உணவுப்பட்டியலும் உண்டு.

தென் ஆசிய விழாக்களை ஹாங் காங் மக்கள் குதூகலமாகக் கொண்டாடுகின்றனர். இந்துக்களின் பூஜையான நவராத்திரியும் கூர்க்காக்களின் வருஷப்பிறப்பான லோஸாரும் இங்கு கொண்டாடுவதுண்டு.



Copyright © Multiculturalism in Action Project 2016



நவராத்ரி கொண்டாட்டம்

நேபாலியர் வருஷப் பிறப்பு தின கொண்டாட்டம்



தென் ஆசியர்கள் பலர் நன்கொடை வழங்கி, ஹாங் காங் நாட்டின் கல்வி, பொதுநல சுகாதாரம் மற்றும் போக்குவரத்து முன்னேற உதவி இருக்கிறார்கள். ஹாங் காங் பல்கலைக்கழகம், பேலியோஸ் பள்ளிக்கூடம், ருத்தஞ்சீ மருத்துவமனை மற்றும் ஸ்டார் பெர்ரி, தென் ஆசியர்கள் நிறுவியனவே.

## சவால்கள்

ஹாங் காங் நாட்டில் வசிக்கும் தென் ஆசியர்களுடைய மிகப் பெரிய சவால், சீன மொழியைக் கற்றுக்கொள்வதே. இல்லத்தில் தாய் மொழி பேசும் இவர்களுக்கு, சீன மொழியைக் கற்கவும் பயிற்சி செய்யவும் வாய்ப்புகள் குறைவு. சிலர் சீன மொழி பேசினாலும், எழுத படிக்க தெரிந்தவர் மிகச்சிலரே. இந்த மொழி பிரச்சனையானது அவர்கள் கல்வியிலும் வேலையிலும் முன்னேறுவதற்குத் தடையாய் அமைகிறது.

ஹாங் காங் பொது நிறுவனங்களில் மொழி மற்றும் கலாச்சார வேறுபாடுகளை அதிகம் கருதாமல் இருப்பதால், தென் ஆசியர்கள் பலர் பாகுபடுத்தப்படுவதாக எண்ணுகிறார்கள். உதாரணத்திற்கு ஹாங் காங் மருத்துவத்துறை, சிறுபான்மை இனத்தவரின் மதம் மற்றும் கலாச்சாரம் சார்ந்த தேவைகளைக் கருத்தில் கொண்டு செயல் பட வேண்டும். இஸ்லாமிய மதத்தினர் தங்களுக்குத் தேவையான ஹலால் மாமிச வகைகள் விற்கும் கடைகளோ, உணவு விடுதிகளோ போதிய அளவில் இல்லாததால் சிரமப்படுகிறார்கள்.



Copyright © Multiculturalism in Action Project 2016 

# சடுகுடு கேளிக்கை

சடுகுடு என்பது தென் ஆசிய கிராமங்களில் பிரபலமானதொரு பாரம்பரிய விளையாட்டு. இது தற்போது ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலும் அதிகாரபூர்வமான அங்கம். சடுகுடு என்ற பதத்திற்கு "வாழத்துவங்கு" என்று பொருள். சடுகுடு விளையாடுவதற்கு நல்ல திட்டமிட்ட கூட்டு முயற்சியும் சுறுசுறுப்பும் மிக அவசியமானவை.

இந்த விளையாட்டில் இரண்டு அணிகள் உண்டு. ஒவ்வொரு அணியிலும் ஏழு உறுப்பினர்கள். சமமான தளமுள்ள மைதானத்தில் ஒரு கோடு இரு அணிகளையும் பிரிக்கும். ஒரு அணியிலிருந்து ஒருவர், அதாவது பிடிப்பவர், மூச்சு விடாமல் சடுகுடு என்று சொல்லிக்கொண்டே நடுக்கோட்டைத் தாண்டிப்போய் எதிர் அணி உறுப்பினரைத் தொட முயற்சிக்க வேண்டும். எதிரணியில் உள்ள தடுப்பவர் அவரைத் தொட விடாது தடுக்க வேண்டும். பிடிப்பவர் வெற்றிகரமாக மூச்சு விடாமல் தனது அணிக்குத் திரும்பிவிட்டால் அவருக்கு மதிப்பெண்கள் கிடைக்கும். பிடிக்கப்பட்டவர் ஆட்டம் இழப்பார். எதிரணியினரோ, பிடிப்பவரை மடக்கிவிட்டால், பிடிப்பவர் ஆட்டம் இழப்பார். இந்த ஆட்டத்தின் வேகமும் விறுவிறுப்பும் பார்வையாளர்களின் உற்சாகத்தைத் தூண்டும்.



இந்த படத்தில் சீன மற்றும் பாகிஸ்தானிய விளையாட்டு வீரர்கள் சடுகுடு பயிற்சி செய்கிறார்கள்

சடுகுடு விளையாட்டில் உங்கள் திறனை முயற்சித்துப் பாருங்கள்

வாருங்கள் எங்களோடு ஆட்டத்தில் சேர்ந்து கொள்ளுங்கள்

ஒரு முறை முயன்று தான் பாருங்களேன்

**FUN with Interculturalism** is funded by the Equal Opportunities Commission, and supported by Department of Anthropology, Arts Faculty, Institute of Future Cities, and Office of Research and Knowledge Transfer Fund, The Chinese University of Hong Kong.



**Copyright © Multiculturalism in Action Project 2016** **Language: Tamil**